பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

03 10 2024 **THURSDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வலிமைமிக்க நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பிரதமரின் தொழில் பழகுநர் திட்டம் இன்று முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

3. ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் சாதனை படைத்த ஆறு பேருக்கு தமிழக அரசின் கலைச்செம்மல் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

4. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. உலக ஜூனியர் டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shukla** வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

வலிமைமிக்க நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தமது அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, உலக நாடுகளின் பார்வை தற்போது இந்தியாவை நோக்கி திரும்பியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகமே இந்தியாவை எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் பார்ப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

பிரதமரின் தொழில் பழகுநர் திட்டத்தை மத்திய அரசு இன்று முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட இந்த திட்டத்தின்கீழ், அடுத்த ஐந்தாண்டுகளில் 500 முன்னணி நிறுவனங்களில் ஒரு கோடி இளையோருக்கு தொழில் பழகுநர் வாய்ப்பு வழங்கும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் இந்த திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் பயனடைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 46 புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

இந்த காலக்கட்டத்தில், ஒன்பது லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்மூலம் 31 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்துறை வளர்ச்சியில் தமிழகம் முன்னணியில் உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

ஓவியம் மற்றும் சிற்பக்கலையில் சாதனை படைத்த ஆறு பேருக்கு தமிழக அரசின் கலைச்செம்மல் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மரபுவழி ஓவியப்பிரிவில் திரு மணிவேலுவுக்கும், சிற்பப்பிரிவில் திரு பாலச்சந்தர் மற்றும் திரு கன்னியப்பனுக்கும், நவீன பாணி ஓவியப்பிரிவில் திரு முரளிதரன் மற்றும் திரு செல்வராஜுக்கும், சிற்பப்பிரிவில் திரு ராகவனுக்கும் இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

<<<<<>>>>

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - கே கே எஸ் எஸ் ஆர் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

மது விற்பனையை அறிமுகம் செய்த கட்சியோடு கூட்டணி வைத்துக்கொண்டு, மதுஒழிப்பு மாநாட்டை விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்தியது, புரியாத அரசியலாக உள்ளது என்று பிஜேபி மாநில ஒருங்கிணைப்பாளர் திரு ஹெச் ராஜா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திரு தொல் திருமாவளவன், மதுபான ஆலை உரிமையாளர்கள் போட்டியிடும் தொகுதிகளில் பிரச்சாரம் செய்துவிட்டு, மதுஒழிப்பு பற்றி பேசுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>

மக்கள் நலனில் அக்கறை இருந்தால் மதுவிலக்கை தமிழக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டம் - ஒழுங்கு மற்றும் மதுவிலக்கு மாநில அரசின் அதிகாரங்களுக்குள் வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நலனை கருத்தில்கொண்டு இதனை செயல்படுத்த வேண்டியது மாநில அரசின் கடமை என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடியின் மன் கி பாத் வானொலி நிகழ்ச்சி இன்று பத்தாண்டுகளை பூர்த்தி செய்துள்ளது.

2014-ஆம் ஆண்டு இதேநாளில் அகில இந்திய வானொலியில் இந்த நிகழ்ச்சி தொடங்கியது.

கடந்த மாதம் ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில், இதுகுறித்து பிரதமர் குறிப்பிட்டு பேசினார்.

*<u>(சவுண்ட் பைட் - மோடி – 71 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>

பிரதமராக திரு நரேந்திர மோடி தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்ற முதல் 100 நாட்களில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு, சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

மூத்த பத்திரிகையாளர் வெங்கடேஷ், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் இரண்டாம் பகுதி இன்றிரவு மணி 9.15-க்கு ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்

<<<<<>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

*<u>(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1)- 56 செகண்ட்ஸ்)</u>*

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த இரு தினங்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்

*<u>(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2) - 23 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தூத்துக்குடியில் புத்தக கண்காட்சியை மாநில அமைச்சர்கள் திரு தங்கம் தென்னரசு, திருமதி கீதா ஜீவன் ஆகியோர் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

திருவள்ளூர் மாவட்டம் புழல் மத்திய சிறையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாநில அமைச்சர் திரு ரகுபதி இன்று திறந்துவைத்தார்.

----------------

நாமக்கல் மாவட்டம் பொரசபாளையம் கிராமத்தில் கொசு ஒழிப்புப்பணிகள் குறித்து ஆட்சியர் திருமதி உமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-------------

தருமபுரியில் புத்தக திருவிழா நாளை தொடங்க உள்ள நிலையில், “தருமபுரி வாசிக்கிறது” என்ற நிகழ்ச்சி ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

-----------------

கன்னியாகுமரி மாவட்டம் காளிகேசம், கீரிப்பாறை பகுதிகளில் உள்ள சாலைகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

*<<<<<>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shukla** வெண்கலப்பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்தார்.

தென்கொரியாவின் **Chuncheon**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 51 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

ஆசிய **Rugby** சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடவர் பிரிவிற்கு **Mohit Khatri**–யும், மகளிர் பிரிவிற்கு **Shikha**-வும் கேப்டனாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டி காத்மண்டில் நாளை தொடங்குகிறது.

*<<<<<END>>>>*